**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**

**S.C.No. 371/2019**

**Defence Witness D.W. 1**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. அலெக்ஸ்பாண்டியன் | Caste | : |
| Father's name | : திரு. A.தேவராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - **21.03.2025**

(எதிரி ஆஜர்)

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது அண்ணாநகர் 6 வது தெரு, கதவு எண்.7Z/4A, வல்லம், தஞ்சாவூர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் தண்ணி கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். நானும், எதிரியும் ஒரே தெருவில் குடியிருந்து வருகிறோம். கடநத் 15.09.2018 ம் தேதியன்று இரவு 10.30 முதல் 11.00 மணியளவில் வல்லம் பேருந்து நிலையத்தில் நானும், மற்றொரு சாட்சி அந்தோணிராஜ் என்பவரும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது வெள்ளை கலர் போலிஸ் வண்டி TN 59 நம்பர் தெரியவில்லை வந்தது மூன்று போலிசார் வந்தார்கள். அவர்கள் மூவரும் போலிஸ் சீருடையில் இருந்தார்கள், அப்போது எதிரி ஜெயபால் பெயரை சொல்லி கேட்டார்கள். சாரதா டீச்சர் பெயரையும் கேட்டு அவர் வீடு எங்கு இருக்கிறது என்று கேட்டார்கள். நான் போலிசாரிடம் சாரதா டீச்சர் வீட்டை காண்பித்தேன். அருகில் என்னுடைய வீடு இருந்ததால் நான் சென்றுவிட்டேன். அப்போது போலிசார் சாரதா டீச்சரையும்,

எதிரியையும் அழைத்துச் சென்றார்கள். இதுசம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது.

அரசு தரப்பில் மனுவின் பேரில் குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

ஒப்பம் /-****
சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxxx
முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**

**S.C.No. 371/2019**

**Defence Witness D.W. 2**

.....

Name : திரு. அந்தோணிராஜ் Caste :

Father's name : திரு. பவுன்ராஜ் Calling :

Village : Religion :

Taluk : Age :

நாள் **- 21.03.2025**

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கதவு எண்.6 பி, சவரியார் கோவில் தெரு, வல்லம் என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோவை வாடகைக்கு விடும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 15.09.2018 ம் தேதியன்று நானும், என் நண்பரான அலெகஸ்பாண்டியன் என்பவரும் பேருந்து நிலையத்தில் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது போலிஸ்வேன் ஒன்று வந்தது. அவர்கள் சாந்தா, முருகையா வீடு எங்கு இருக்கிறது என்று கேட்டார்கள். நான் அவர்கள் வீட்டை காண்பித்தேன். அதன்பின்னர் போலிசார் சாந்தாவையும், முருகையாவையும் ஏற்றிச் சென்றார்கள். இதுசம்பந்தமாக எனக்குவேறு எதுவும் தெரியாது. மேற்படி விபரங்கள் இரவு 10.30 முதல் 11.00 மணி வரை நடந்தது.

அரசு தரப்பில் மனுவின் பேரில் குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

ஒப்பம் /-****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,

மதுரை.